செ.வெ.எண்:64 நாள்:26.11.2021

**கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று (26.11.2021) நடைபெற்றது.**

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2017 - ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, பிரதமர் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் 48 ஆயிரம் நபர்கள் தகுதியானவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் கடந்த 4 ஆண்டுகளில் வீடு கட்டியிருந்தால், அவர்களுக்கு பிரதமர் வீடு வழங்கும் திட்டத்தில் வீடுகள் வழங்க இயலாது என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 29.10.2021 அன்று நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் வேளாண்மை துறை மற்றும் தோட்டக்கலைத்துறை சார்பாக பயிர் சேதம், ஏரி ஆக்கிரமிப்பு அகற்றுவது, வன விலங்குகளால் ஏற்படும் பயிர் சேதம், பட்டா வழங்குதல், கூட்டுறவு வங்கி கடன் பெறுதல், கால்நடை பராமரிப்புத்துறை சார்பாக மருத்துவ வசதிகள், மின்சார இணைப்பு வழங்குவது உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்பாக பல்வேறு கோரிக்கைகள் விவசாயிகள் ஏற்கனவே 236 மனுக்கள் அளித்ததன் பேரில் இன்று சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலர்கள் பதில் அளித்தனர்.

தொடர்ந்து, இன்று நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகளிடமிருந்து 176 மனுக்கள் பெறப்பட்டது. மேலும், விவசாயிகளின் கோரிக்கைகளான பட்டா மாற்றம், விவசாய கடன், ஏரி மற்றும் நீர் நிலைகள் ஆக்கிரமிப்பு அகற்றுதல், கால்நடைகள் இறப்பு நிவாரணம், வடகிழக்கு பருவமழையால் ஏற்பட்ட பயிர்சேத நிவாரணம், சாலைகள் சீரமைப்பு மற்றும் குடிநீர் உள்ளிட்ட விவசாயிகள் அளித்த கோரிக்கைகளுக்கு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.செ.ராஜேஸ்வரி, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.ராஜேந்திரன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர்(பொ) திரு.ராம்பிரசாத், கால்நடை பராமரிப்புத்துறை இணைஇயக்குநர் மரு.ராஜேந்திரன், கூட்டுறவு சங்கங்கள் மண்டல இணைப்பதிவாளர் திரு.மொ.ஏகாம்பரம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.கிருஷ்ணமூர்த்தி, எலுமிச்சங்கிரி வேளாண் அறிவியல் மைய தலைவர் மரு.சுந்தராஜ் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**